SC.131/2024
Dt.03.06.2024
**PW59.சங்கர்**

**1, 6, 7, 9, 11, 15, 17 எதிரிகள் ஆஜர். 5 , 8 எதிரிகள் இறப்பு . 2, 3, 4, 8, 10, 12, 13, 14, 16 எதிர்கள் ஆஜரில்லை. Sec.317 Cr.P.C ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.**

**சாட்சி மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரிகள் 14, 17 தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

மாவட்ட ஆட்சியர் மற்றும் அமைச்சர்கள் வாகனங்களில் தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்தபோது சம்பவம் நடந்ததாக அரசு தரப்பு வழக்கு என்றால் சரிதான். வெடி சத்தம் கேட்டதும் முதல் வாகனம் நின்றதாகவும், அதை தொடர்ந்து மற்ற வாகனம் நின்றதாகவும் அரசு தரப்பில் கூறப்பட்டது என்றால் சரிதான். முதல் வாகனத்தில் ஓட்டுநர் சம்பவத்தை நேரில் பார்த்திருக்க வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புகள் அதிகம் என்றால் சரிதான். முதல் வாகனம் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் வாகனம் ஆகும். சாட்சிகளில் கு.வி.மு.ச 161 ன் கீழான வாக்குமூலம் என்னால் கையொப்பமிடப்பட்டது என்றால் சரிதான். மக்கள் தொடர்ப்பு துறை அதிகாரி நவாஸ்கான் என்பவரை விசாரிக்கவில்லை. அவர் என்னுடைய விசாரணையில் "நாங்கள் முன்னால் சென்று கொண்டிருந்தோம்" என்றும், "பின்னர் குற்றாலம் செல்வதற்காக தென்காசி ரோட்டில் சென்று கொண்டிருந்தோம். அப்போது எங்கள் வாகனத்திற்கு பின்னால் மருத்துவ அதிகாரி கார்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் கார்களும், அமைச்சர்கள் கார்களும் வந்து கொண்டிருந்தது" என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயராமன் எனது விசாரணையில் "பின்னர் தென்காசி செல்வதற்காக சென்றபோது எனது வாகனத்தின் முன்னால் மருத்துவ உயர் அதிகாரிகளின் கார்களும், பின்னால் அமைச்சர்களின் கார்களும், வேறு சில கார்களும், போலீஸ் வாகனங்களும் வந்து கொண்டிருந்தது " என்று கூறியிருக்கிறார்கள் என்றால் சரிதான். முன்னால் சென்ற மருத்துவ அதிகாரிகளின் வாகனம் என்று சொல்வது அம்பாசமுத்திரம் மருத்துவமனை ஆய்வை முடித்துவிட்டு சென்ற மருத்துவ அலுவலர்களை பற்றி கூறுவது ஆகும். மருத்துவ அலுவலர் சுப்பிரமணியமும் மாவட்ட ஆட்சித்தலைவர் சென்ற தொடர்வரிசையில் சென்றார். அவர்தான் காயம்பட்டவரை மருத்துவமனைக்கு எடுத்து சென்றவர் என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் வெட்டுப்பட்டு கிடந்த நபர்

ஆழ்வார்குறிச்சி காவல்நிலையத்தில் வேலை பார்க்கும் Sub Inspector திரு.வெற்றிவேல் என்பதும், அவரை சில நபர் வெடி குண்டு வீசியும், அரிவாளால் வெட்டி காயம்பட்டுத்திவிட்டு ஓடிவிட்டதாக அருகில் இருந்தவர்கள் கூறினார்கள் என்றும் தொடர்ச்சியாக "இது சம்பந்தமாக விசாரித்ததிலும் தொலைபேசி மற்றும் செய்திதாளிலும் பார்த்தபோதும், கடையம் Sub Inspector சிவசுப்பிரமணியன் மனைவி சிவகாமி மற்றும் அவரது சகோதரர்கள் சிவசுப்பிரமணியனை கொலை செய்ய திட்டமிட்டு அதன்படி சில கூலிபடையுடன் வந்து தலையில் ெஹல்மெட் அணிந்து வந்த ஆழ்வார்குறிச்சி Sub Inspector வெற்றிவேலை அவர்தான் சிவசுப்பிரமணியன் என நினைத்து வெடி குண்டு வீசியும், அரிவாளால் வெட்டியும் கொலை செய்து விட்டதாக தெரிந்து கொண்டேன் " என கூறியுள்ளார். சாட்சி மணி என்னுடைய விசாரணையில் எங்கள் வண்டிக்கு முன்னால் மாண்புமிகு சுகாதார துறை அமைச்சர் திரு.பன்னீர்செல்வம், மாண்புமிகு விளையாட்டு துறை அமைச்சர் மைதீன்கான் கார்களும், மருத்துவ அதிகாரிகளின் கார், பத்திரிக்கை நிருபர்கள், செய்தியாளர்கள், புகைப்படகாரர்கள் ஆகியோர்களின் கார்களும் மாவட்ட ஆட்சித்தலைவர் காரும் சென்றன என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். அது 07.01.2010 ம் தேதி அவர் கொடுத்த வாக்குமூலம் ஆகும். மாவட்ட ஆட்சித்தலைவரின் கார் ஓட்டுநரையோ, அல்லது அவருடன் பயணம் செய்வர்களையோ கொண்டு அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தவில்லை என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியர் எனது விசாரணையில் " தென்காசிக்கு புறப்படும் வழியில் என்னுடைய வாகனம் முதலாவதாகவும், அதற்கு பின்னால் பிஆர்ஓ வாகனமும், அதற்கு பின்னால் மருத்துவர் திரு.சுப்பிரமணியன் வாகனமுமம, அதற்கு பின்னால் அமைச்சர் மைதீன்கான், சுகாதார துறை அமைச்சர் பன்னீர்செல்வம் ஒன்றாக அமர்ந்திருந்த வாகனமும், அதற்கு பின்னால் போலீஸ் பணிகாவல் வாகனமும் வந்தன" என்று என்னுடைய விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. எனது விசாரணையின்போது மாவட்ட ஆட்சியர்" எனது வாகனத்தின் முன்னால் மருத்துவ உயர் அதிகாரிகளின் கார்களும், பின்னால் அமைச்சர்களின் கார்களும், வேறு சில கார்களும், போலீஸ் வாகனங்களும் வந்து கொண்டிருந்தது" என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். மதியம் 2.40 மணிக்கு சம்பவம் நிகழ்ந்தது. எனது பிரேத விசாரணை அறிக்கையில் காலம் 4 ல் மதியம் 2.45 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து காயம்பட்டவர் சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டதாக கூறப்பட்டது என்றால் சரிதான். அம்பாசமுத்திரம் அரசு

மருத்துவமனையில் மதியம் 3 மணிக்கு காயம்பட்டவர் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மருத்துவர் நடராஜன் திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மாலை 4.30 மணிக்கு காயம் அடைந்தவரை இறந்த நிலையில் பார்த்ததாக அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு சம்பவ இடத்திலிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டதாக எனது விசாரணையில் தெரியவந்தது. ஆம்புலன்ஸ் வாகனம் வந்து மருத்துவமனைக்கு எடுத்து செல்ல காலதாமதம் ஆகும் என்பதால் காவல்துறை வாகனத்தில் அவர் அம்பாசமுத்திரம் மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டார். காயம்பட்டவர் சம்பவ இடத்தில் சுமார் 20 முதல் 25 நிமிடங்கள் உயிருக்கு போராடிய நிலையில் இருந்ததாக நான் தாக்கல் செய்த ஆவணங்களிலிருந்தும், வீடியோ ஒளிபடத்தின் மூலமாகவும் துலங்கும் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி 1 சம்பவ இடத்தில் அமைச்சர் இருந்தப்படியாலும், காயம்பட்டவரை மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டியிருந்ததாலும், சம்பவ இடத்திற்கு திரும்பி வந்தோம். சம்பவ இடத்தில் காயம்பட்டு கிடந்தவர் அணிந்து இருந்த உதவி ஆய்வாளருக்கான சீருடையில் வெற்றிவேல் என பெயர் எழுதப்பட்ட Batch அணிந்திருந்தார். உடனே காயம்பட்ட வெற்றிவேல் அவரை நெல்லை மாநகர வாகனத்தில் ஏற்றி அம்பாசமுத்திரம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம்" என்று கூறியுள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் எதிரிகளை தேடி சென்றபோது சம்பவ இடம் அருகில் உள்ள கடனாநதி தரைபாலத்தில் எனது ஜீப் வாகனம் சென்று கொண்டிருந்தபோது, ஆற்றிற்குள் மேல் பகுதியிலிருந்து பாலத்தை நோக்கி காவலர்கள் எனது வாகனத்தை நோக்கி வந்தார்கள். அந்த காவலர்கள் வி.கே.புரம் ஆயுதப்படை காவலர்கள் ஆவார்கள். நான் கூறுவது தவறு என்றும், அவர்கள் தப்பி ஓடியவர்களை தேடி சென்று திரும்பி காவலர்கள் என்று சொன்னால் சரிதான். அவர்களை தேடி சென்றவர்கள்தான் பட்டியல் சாட்சி 1 முதல் 5 என்றால் சரியல்ல. 5, 6 நபர்கள் காயம்பட்ட வெற்றிவேலை வெட்டி விட்டதாகவும், அந்த நபர்கள் ஆற்றிற்குள் ஓடியதாகவும், அவர்களை காவலர்களை துரத்தி சென்றதாகவும், என்னையும் எதிரிகளை தேடி பார்க்கும்படி மாவட்ட ஆட்சியர் கூறினார் என்றும், நான் முன்னதாக கூறிய குறுக்கு விசாரணையில் கூறிய விபரங்கள் தவறு என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு மாவட்ட ஆட்சியர் 5 நிமிடங்கள் கழித்துதான் வந்து சேர்ந்தார் என்றும், குற்ற செயலை செய்தவர்கள் அருகில் எங்கேயேனும் பதுங்கி இருக்க கூடும் என்று மட்டும்தான் மாவட்ட ஆட்சியர் சொல்லியிருக்க கூடும்

என்றால் சரியல்ல. 07.01.2010 சம்பவ நாள் அன்று மாலை முரசு மாலை பதிப்பு பத்திரிக்கையில் தலைப்பு செய்தியாக மணல் மாபியாக்களால் உதவி ஆய்வாளர் வெட்டி கொலை என செய்தி வெளியிடப்பட்டிருந்தது என்றால் அதை நான் கவனிக்கவில்லை. எங்கள் காவல்நிலையத்தில் அடையாளம் தெரியாத மணல் கொள்ளையர்களால் உதவி ஆய்வாளர் தாக்கப்பட்டதாக முதலில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சி அம்பிகாபதி என்ற கூலி அம்பி மற்றும் சங்கரபெருமாள் ஆகிய இருவரும் சம்பவம் நடைபெறும் முன்பாகவே பாலத்தின் தெற்கு கரையில் உதவி ஆய்வாளரின் பின்னால் வந்ததாகவும், அவர் 2 நபர்களை சந்தேகப்பட்டு விசாரித்தாகவும், அதன்பிறகு பின் தொடர்ந்து வந்ததாகவும், பின்னர் சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் இந்நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு விசாரிக்கப்படாததற்கு குறிப்பான காரணம் எதுவும் எனக்கு தெரியாது. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், அவர்களை சாட்சியாக விசாரித்தால் அந்த விபரம் தெரியவந்துவிடும் என்பதால் வேண்டுமென்றே அவர்களை விசாரிக்காமல் விட்டுவிட்டோம் என்றால் சரியல்ல. சாட்சிகள் அம்பிகாபதி என்ற கூலி அம்பி மற்றும் சங்கரபெருமாள் ஆகியோர்களை கொண்டு அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 5, 6 நபர்கள் அரிவாளால் தாக்கியதாக வழக்கு என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 1 எனது விசாரணையில் 6 நபர்கள் கையில் அரிவாளுடன் ஓடி வந்து வெட்டியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். 07.01.2010 ம் தேதி பட்டியல் சாட்சி 1 மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றில் முதன் முதலில் சம்பவத்திற்கு முன்பாக வெடி குண்டை வீசிய நபர் யார் என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். 08.01.2010 அன்று பட்டியல் சாட்சி 1 முதல் 3 ஆகியோர்களை விசாரித்துள்ளேன். அப்போது அவர்கள் எனது விசாரணையில் ரோட்டிற்கு கிழக்கு பக்கத்திலிருந்து கீழே விழுந்தவர்களை பார்த்து ஓடிவந்தார்கள். அவர்களில் 4 பேர் கைகளில் வெட்டு அரிவாளை வைத்திருந்தார்கள் என்று கூறியிருந்தார்கள் என்றால் சரிதான். 07.01.2010 ம் தேதியிட்ட கு.வி.மு.ச 161 வாக்குமூலத்தில் பட்டியல் சாட்சி 1 கீழ்ப்பக்கம் இருந்து 6 நபர்கள் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அதன் தொடர்ச்சியாக ஓடிய மேற்படியார்களை பிடிக்க துரத்தியபோது என்றும் துரத்தியபோது ஓடியவர்களில் ஒருவன் வெடி

குண்டை வண்டி மீது வீசினான் என்றும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எனவே 07.01.2010 ம் தேதி அவர் அளித்த வாக்குமூலத்தில் சம்பவத்தில் 6 நபர்கள்மட்டும்தான் ஈடுபட்டதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. 08.01.2010 ம் தேதியிட்ட வாக்குமூலத்தில் மொத்தம் 11 நபர்கள் சம்பவ இடத்தில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 1 08.01.2010 ம் தேதியிட்ட வாக்குமூலத்தில் மண் ரோடு பிரியும் இடத்தில் நின்று கொண்டிருந்த 2 நபர்களும் அவர்கள் பின்னால் ஓடினார்கள் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். மேலும் எனது விசாரணையில் 08.01.2010 அ.சா.1 வாக்குமூலத்தில் அப்போது அங்கே ஆலமரத்தின் பக்கத்தில் இருந்து மேலும் 3 எதிரிகள் வேகமாக ஓடினார்கள். அதில் 2 பேர் சற்று துரத்தில் நிறுத்தி இருந்த TN 72 X 444 மற்றும் TN 69 C 0790 என்ற எண்கள் கொண்ட மோட்டார் சைக்கிள்களில் ஏறி அதில் இன்னும் 2 பேர்கள் ஏறி கொண்டு வேகமாக போனார்கள் என்று கூறியிருக்கிறார். மேற்கண்ட விபரங்கள் 07.01.2010 ம் தேதியிட்ட வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். எந்த எந்த எதிரிகள் எந்த எந்த குற்றசெயல்களை குறிப்பாக செய்தார்கள் என்று சாட்சிகள் எவரும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. அடையாள அணிவகுப்பு முடிந்து சாட்சிகளை விசாரித்தபோது அவர்கள் எந்த எதிரி எந்த குற்றசெயல்களை செய்தார்கள் என்று குறிப்பிட்டு கூறியுள்ளார்கள். 21.01.2010 ம் தேதி நடந்த அடையாள அணிவகுப்பின்போது சாட்சிகள் அடையாளம் காட்டிய 3 நபர்களின் குற்றசெயல்கள் தொடர்பாக குறிப்பிட்டு எனது விசாரணையில் கூறியுள்ளனர். அவர்களின் பெயர், விபரம் சாட்சிகளுக்கு தெரியாது என்பதால் குறிப்பிட்டு கூறவில்லை. அவர்களிடம் அன்றைய தினம் அடையாளம் காட்டிய நபர்களின் பெயரை நான் கேட்டதாகவோ, அவர்கள் சொன்னதாகவோ குறிப்பிட்டு வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். 21.01.2010 ம் தேதியிட்ட 14 வது எதிரியின் அடையாள அணிவகுப்பின்போது எதிரி கூறியதாக நீதித்துறை நடுவர் பதிவு செய்த குறிப்பில் எதிரி தன்னை காவல்நிலையத்தில் வைத்து புகைப்படம் எடுத்தாகவும், அவரது படம் தொலைக்காட்சியிலும், நாளிதழிலும் வெளிவந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எதிரி ஐயப்பனை பாளையங்கோட்டை சமாதானபுரத்தில் வைத்து கைது செய்துள்ளோம். அந்த இடம் ஆழ்வார்குறிச்சி காவல்நிலையத்திலிருந்து 50 கி.மீ துரத்தில் உள்ளது. கல்யாணி புரத்தை சேர்ந்த சாட்சி தங்கராஜ் மற்றும் ஆழ்வார்குறிச்சியை சேர்ந்த சுப்புகுட்டி மகன் செல்லத்துரை அப்போது

கைதின்போது உடனிந்தவர்கள் என்றால் சரிதான். சமாதானபுரம் என்ற இடம் பாளையங்கோட்டையில் ஒரு முக்கியமான சந்திப்பு பகுதி என்றால் சரிதான். அந்த இடத்தில் போக்குவரத்தும், மக்கள் நடமாட்டமும் கடைகளும் நிறைந்த பகுதி என்றால் சரிதான். எதிரி ஐயப்பனை கைது செய்யும் முன்பாக தெரியாது. அதே இடத்தில் திருச்செந்துர், தூத்துக்குடி செல்லும் வாகனங்களும் நின்று செல்லும் பேருந்து நிறுத்தமும் உள்ள இடம் என்றால் சரிதான். அதைபோலவே புதிய பேருந்து நிலையம், ஜான்ஸ் கல்லூரி செல்லும் வாகனங்களும் உள்ள சந்திப்பு என்றால் சரிதான். மற்றொரு சாலை திருநெல்வேலியை நோக்கி செல்லும் சாலை என்றால் சரிதான். அந்த முச்சந்தியில் கிழக்கு நோக்கி செல்லும் சாலையில் தெற்கே உள்ள பேருந்து நிறுத்தின் அருகில் கைது செய்யப்பட்டார். அந்த பேருந்து நிறுத்தம் திருநெல்வேலி நோக்கி வாகனங்கள் செல்லும் பேருந்து நிறுத்தம் ஆகும். அந்த பேருந்து நிறுத்தம் சந்திப்பில் இருந்து எவ்வளவு துரம் தெற்கே உள்ளது என்று ஞாபகமில்லை. அந்த சந்திப்பின் பேருந்து நிறுத்ததில் கைது செய்தேன். எந்த இடத்தில் என்று சரியாக ஞாபகமில்லை. அருகில் கடைகள் இருந்ததாக என்றும், அது எந்த கடைகள் என்றும் தற்போது ஞாபகமில்லை. நான் கைது செய்த நபர் பற்றி எனக்கு கூறிய ரகசிய தகவலாளி கைது செய்த நபரின் என்ன அடையாளத்தை குறிப்பிட்டு கூறினார் என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. 14 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் என்னுடன் வந்த காவலரால் எழுதப்பட்டது. எனது வழிகாட்டுதலின்பேரில் எழுதப்பட்டது. அவரது பெயர் தற்போது ஞாபகமில்லை. நான் சொல்ல சொல்ல அவரால் ஒப்புதல் வாக்குமூலம் எழுதப்பட்டது என்ற விபரங்கள் அசா.38 ல் துலங்காது. அதை எழுதி முடிக்க 30 முதல் 45 நிமிடங்கள் ஆகி இருக்கக் கூடும். அவர் பதிவு செய்யும் போது அருகில் இருந்த கடைக்காரர்களை நான் சாட்சியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கடைக்கார்களை சாட்சியாக அழைக்கவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து 14 வது எதிரியை கைது செய்யவில்லை என்றும் வீட்டில் இருந்த நபர்களை விசாரணை என்று அழைத்து வந்து எங்கள் வழக்கிற்கு ஏற்ப ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ-38 எதிரியால் வழங்கப்பட்டதல்ல என்றும், எங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் என்றால் சரியல்ல. சுப்பையா தேவர் மகன் முத்துக்கிருஷ்ணன் என்பவருக்கு கைது பற்றிய விபரம் பற்றி குறிப்பிட்டுளளேன். எந்த வகையில் தகவல் தெரிவிக்கப்பட்டது என்று கைது

குறிப்பாணையில் துலங்காது என்றால் சரிதான். 14 வது எதிரி பிள்ளைமார் இனத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். சம்பவம் நடந்த பின்பு ஆற்றுக்குள் மேற்குநோக்கி சென்றதாக எனது விசாரணையில் துலங்குமா என்றால் ஓடியதாக என்று கூறியுள்ளார்கள். அ.சா.,ஆ 39 ல் கைப்பற்றப்பட்ட இடம் ஆற்றுக்கு கிழக்கு பக்கமுள்ள முட்புதரில் எடுதது ஆஜர்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் எதிரி கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ-39 ல் சட்டையை எந்த எதிரி அணிந்துஇருந்ததார் என்று எனது விசாரணையில் சாட்சிகள் எவரும் குறிப்பிட்டு கூறியுள்ளனோ என்றால் அவ்வாறு எவரும் கூறவில்லை. அன்றைய தினமே சான்று பொருட்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பட்டப்பட்டுள்ளது. நான் கைப்பற்றிய சான்று பொருட்களும் 14 வது எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றும், அவர் எந்த பொருளை ஆஜர்படுத்தவில்லை என்றும், சான்று பொருட்களும் எதிரிக்கும் சம்பந்தம் ஏற்படும் என்றால் சரியல்ல. மேற்படி எதிரியை போலீஸ் கஸ்டடிக்கு ஒரு வாரம் கழித்து மீண்டும் விசாரித்தோம் என்றால் சரிதான். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் கொடுதததாக சொல்வதும், போட்டோக்கள் கொடுத்தாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. புகைப்படத்தினை ஸ்ரீவைகுண்டம் தாலுகா , வெள்ளுர் இடத்தில் வைத்து கைப்பற்றீனரா என்றால் சரிதான். அந்த அத்தாட்சிகளில்எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அந்த வீட்டில் உள்ள நபர்கள் மற்றும் பக்கத்து வீட்டில் உள்ள நபர்களை அந்த வீடு யாருக்கு சொந்தமானது விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் அந்தவீடு எதிரி தன்னுடைய வீடு என்று கூறியுள்ளார். நான் அந்த வீட்டிற்கு செல்லவில்லை என்றும், எதிரி புகைப்படம் எதுவும் எடுத்துக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 14 வது எதிரி கிராம நிர்வாக அலுவலர் முன்பு ஆஜராகி வாக்குமூலம் கொடுதது என்னிடம் விசாரிக்கப்படடதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்ச ரிதான். அவர் 14 வது எதிரி யின் சகோதரர் என்றால் சரிதான். இரண்டு எதிரிகளும் வேறு சமுதாயத்தினை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் எதிரியை ஒப்படைக்கும் போது எதிரி ஆஜரான நேரம், தேதி, இடம் மற்றும் சுருக்க விபரங்கள் போன்றவற்றை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். தனியறிக்கை சமர்ப்பித்துள்ளார். தனியறிக்கையில் அலுவலக முத்திரை இல்லை என்றால் சரிதான். 17 வது எதிரியை வீட்டில் இருந்து அழைத்து சென்று எங்கள் வசதிக்கு ஏற்ப ஆவணங்களை உற்பத்தி செய்து கிராம நிர்வாக அலுவலரை வற்புறுத்தி காவல்

நிலையத்தில் வைத்து பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 18 வது எதிரியையும் தனியறிக்கை மூலம் கிராம நிர்வாக அலுவலர் முன்பு ஆஜர் படுததப்பட்டுள்ளார். கிராம 18 வது எதிரி நிர்வாக அலுவலர் முன்பு நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் சரணடைந்ததாக கூறுவதும் அவர் மேற்படி எதிரியை என்னிடம் ஆஜர்படுத்தியதாக கூறுவதும் உண்மையில்லை என்றும், எதிரியை ஏற்கனவே நாங்கள் கைதுசெய்து எங்கள் பொறுப்பில் வைத்து கொண்டு காவல் நிலையத்தில் எங்கள் வழக்கிற்கு ஏற்ப உற்பத்தி செய்து, அதற்கு ஏற்ப கிராம நிர்வாக அலுவலரை பயன்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. அவர் எங்கள் முனனிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுககவில்லை என்றும், எந்தபொருட்களை ஆஜர்படுததவில்லை என்றும், கைப்பற்றததாக பொருட்களும், 18 வது எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. 14 வது எதிரி ஐயப்பனுக்கு பிரிவு 164 ன்படி வாக்குமூலத்திற்கு நான்தான் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். எதிரியை கட்டாயப்படுத்தி, ஆசை வார்த்தை கூறி பிரிவு 164 ன் படி தூண்டியுள்ளேன் என்றால் சரியல்ல. 14, 17, 18 வது எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 14 வது எதிரியை நாங்கள் கைது செய்தபோது எடுத்த போட்டோக்களின் அடிப்படையில் அவர் அடையாள அணிவகுப்பில் சாட்சியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் ஜெய்ஸ்ரீ அவர்கள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது மதியம் 3 மணிக்கு சம்பவ இடம் சென்றதாகவும், 3.10 முதல் 3.15 மணிக்குள்ளாக கடையம் காவல் ஆய்வாளர் வந்ததாகவும், அதன்பின்னர் அவரது உத்தரவின்பேரில் மதியம் 3.30 மணிக்கு ஆழ்வார்குறிச்சி காவல்நிலையம் சென்றதாகவும் கூறிய விபரங்களை எனது விசாரணையின்போது கூறவில்லை. அதாவது குறிப்பாக மேற்கண்ட நேரம் குறித்த விபரங்களை கூறவில்லை. அ.சா.1 எனது விசாரணையின் எதிரிகளின் பெயர் விபரங்கள் எதையும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கந்தசாமி, கள்ளபிரான், ஐயப்பன், சுப்பிரமணி, கண்ணன், முருகன், சுரேஷ்குமார் என்ற முத்துகுமார், ராதா என்ற ராதாகிருஷ்ணன், அம்மாமுத்து ஆகியோர்களின் பெயர் விபரங்களை கூறவில்லை. அடையாள அணிவகுப்பிற்கு பின்னர் அவர்கள் பெயரை சாட்சிகள் தெரிந்துக்கொண்டார்கள். அ.சா.1 மணி என்னுடைய விசாரணையில் பைப் வெடிகுண்டை வீசியவர் ஐயப்பன் என்று பெயர் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஐயப்பனுடன் வந்த எதிரி மாரியப்பன் என்று என்னிடம் குறிப்பிட்டு

கூறவில்லை. இறந்தவர் முதலில் மணல் கடத்தல் கும்பலால் தாக்கப்பட்டார் என்பதுதான் எங்களுக்கு கிடைத்த முதல் தகவல் என்றும், சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அவருடன் பயணித்த அமைச்சர்கள் அணிவகுப்பு வாகனங்கள் எதுவும்இல்லை என்றும், சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் அனைவரும் சம்பவம் நடந்த சிறிது நேரத்திற்கு பின்னரே வந்த நபர்கள் என்றும், அவர்களுக்கு முன்னதாக சம்பவம் பற்றி நேரில் எதுவும் தெரியாது என்றும், சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை தேடிதான் போலீசார்கள் சென்றார்கள் என்றும், அவர்கள் எவரையும் துரத்தி சென்றது இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 துரத்தில் சென்றதாகவும், துப்பாக்கி சுடு நடத்தியதாகவும், நபர்களை விரட்டி பிடிக்க முடியவில்லை என்று திரும்பி வந்ததாகவும், அதன்பின் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாக சொல்வதும், அதனடிப்படையில் வழக்கு பதிவு செய்து நான் விசாரணை செய்ததாக கூறுவதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி 24 மாவட்ட ஆட்சியர் ஜெயராமன் எனது விசாரணையில் காயம்பட்டவரை சிகிச்சைக்கு கொண்டு சென்ற சப் இன்ஸ்பெக்டர் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்ததால், அதன் தொடர்ச்சியாக அவரது வாக்குமூலத்தில் அமைச்சர்களை மதுரைக்கு அனுப்பிவிட்டு, நான் திருநெல்வேலி திரும்பிவிட்டேன் என்றும் கூறியிருக்கிறார் என்றால் சரிதான். மதுரையிலிருந்து வந்த AR போலீஸ் படையினர்களை புகார் கொடுக்க அனுப்பி வைத்ததாக அவர் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். அமைச்சர் எனது விசாரணையின்போது மதுரை AR போலீஸ் படையினரை திருநெல்வேலியிலேயே விட்டுவிட்டு திருநெல்வேலி போலீசாரை வழிக்காவலுக்கு அழைத்துக்கொண்டு திரும்ப சென்றதாக கூறவில்லை என்றால் சரிதான். மதுரை AR போலீஸ் படையினரின் கடவுச்சீட்டு வழக்கிற்கு விரோதமாக அமையும் என்பதால்அதைவேண்டுமேன்றே மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. மதுரை AR போலீசார் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணியை முழுவதுமாக முடித்து மீண்டும் அதே நாளில் மதுரை AR படைதளத்திற்கு சென்று அறிக்கை செய்துள்ளனர் என்றால் சரியல்ல. மதுரை AR போலீசாரின் SLR துப்பாக்கி பயன்படுத்தவே இல்லை என்றால் சரியல்ல. அது தொடர்புடைய ஆவணங்களை ஆஜர்படுத்தினால் அது அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக அமையும் என்பதால் அதை நான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் அந்த துப்பாக்கி துடு நடத்தப்படவே இல்லை

என்றும், அதனால்தான் அது தொடர்புடைய ஆவணங்கள் கைப்பற்றப்படவில்லை என்றும், அது தொடர்பாக AR காவல்படையினரால் விசாரணை அறிக்கை தயாரிக்கப்படவே இல்லை என்றும், காலி தோட்டாக்கள் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. உதவி ஆய்வாளர் சிவசுப்பிரமணியனின் துண்டுதலால் எனது உயர் அதிகாரிகள் அறிவுரைப்படி நான் தவறாக வழிநடத்தப்பட்டு, புலனாய்வை மேற்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. மாலை நாளிதழில் வெளிவந்த செய்திகளை பட்டியலுக்கு நன்கு தெரிந்து இருந்தும் வேண்டுமென்றே அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. 14, 17, 18 எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அவர்கள் வேண்டுமென்றே இவ்வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது புலனாய்வு ஒருதலைப்பட்சமானது என்றும், மேலதிகாரிகளின் வற்புறுத்தலுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

Sd/- B.Rajavel,
Principal District Judge,
Tenkasi